செ.வெ.எண்: 52 நாள்: 19.02.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் குரூப்-I தேர்வினை 2368 நபர்கள் எழுதினர் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சார்பில் குரூப்-I தேர்வு நடைபெற்ற தேர்வு மையங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (19.02.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து கூறியதாவது.

தமிழ்நாடு முழுவதும் பல்வேறுத் துறைகளில் காலியாக உள்ள காலிப்பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் சார்பில் குரூப்-I தேர்வு இன்று (19.02.2017) நடைபெற்றது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் குரூப்-I தேர்வு 13 இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தேர்வு மையங்களில் நடைபெற்றது. இதில் குரூப்-I தேர்வு நடைபெற்ற புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரி, மாட்சிமைதங்கிய மன்னர் கல்லூரி, அரசினர் இராணியார் மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகிய தேர்வு நடைபெறும் மையங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும் நமது மாவட்டத்தில் குரூப்-I தேர்வுக்கு விண்ணப்பித்த 3747 நபர்களில் 2368 நபர்கள் தேர்வு எழுதினர். 1379 நபர்கள் தேர்வுக்கு வருகை தர வில்லை. தேர்வு எழுதியவர்களின் சதவீதம் 63.2 ஆகும். தேர்வறையில் கைப்பேசி, கால்குலேட்டர், எலக்ட்ரானிக் கருவிகள், உள்ளிட்ட பல்வேறு மின்னனு சாதனங்கள் தடை செய்யப்பட்டுள்ளது. தேர்வுகளில் முறைகேடுகளை தடுக்கும் வகையில் பறக்கும் படைகள் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எனவே அனைத்து தேர்வர்களும் தேர்வினை எவ்வித முறைகேடுகளுமின்றி சிறப்பாக எழுதி தேர்ச்சி அடைய வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது புதுக்கோட்டை வட்டாட்சியர் திரு.செந்தமிழ்குமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**